
# அத்திக்கடவு, அவிநாசி திட்டம்:

# - இது அறுபதாண்டுக் கோரிக்கை!

**த**மிழகத்தின் 90 சதவிகித அணைக் கட்டுகளைக் கட்டியவர் பெருந்தலைவர் காமராஜர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் ஆட்சி செய்த காலத்திலேயே பவானி ஆற்றின் உபரி நீரை, வானம் பார்த்த பூமியான அவிநாசி வட்டாரத்திற்குக் கொண்டு வரும் திட்டம் குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. அப்போது அந்தத் திட்டத்தின் பெயர் - குந்தா கழிவு நீர்த் திட்டம். அதன் பிறகு, பல்வேறு பெயர்களில் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டாலும், இன்றுவரை நிறைவேற்றப்படாமல் அந்தரத்தில் நிற்கும் திட்டம்தான் அத்திக்கடவு - அவிநாசி திட்டம்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் எல்லா பிரதானக் கட்சிகளும் அவிநாசியில் கொடுக்கும் வாக்குறுதி - 'அத்திக்கடவு திட்டத்தை நாங்கள் நிறைவேற்றுவோம்' என்பது தான். சுமார் 40 வருடங்களாக இந்த வாக்குறுதிகளைக் கேட்டுப் புளித்துப் போய்க் கிடக்கிறார்கள் அவிநாசி வட்டார மக்கள்.


அம்பலவாணன்

94 வயதாகும் **சி.ஹெச். அம்பலவாணன்**, குளம், குட்டைகள் நீர் நிரப்பும் சங்கத்தின் தலைவராக இருக்கிறார். அவரைச் சந்தித்துப் பேசினேன். ''குந்தா ஆறும், பவானி ஆறும்' சேரும் இடத்தருகே ஒரு செக் டேம் கட்டி, அங்கிருந்து அவிநாசிக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம்தான் அந்த ஏரியாவின் பெயரால் அத்திக்கடவுத் திட்டம் என்று கூறப்பட்டது. இது விவசாயத்திற்கான திட்டம் அல்ல. இது முழுக்க முழுக்க குளம், குட்டைகளை நிரப்பி, இந்தப் பகுதியின் நிலத்தடி நீரைப் பெருக்கும் யோசனையில் பேசப்பட்ட திட்டம்.

''இந்தத் திட்டத்திற்கு வெறும் இரண்டு டி.எம்.சி. தண்ணீர் போதுமானது. வருடத்திற்கு 2 டி.எம்.சி. நீரைக் கொண்டு வந்தால் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டத்திலுள்ள 71 குளங்கள், 630 குட்டைகளை நிரப்பி விடலாம். இதனால் இந்த வட்டாரத்தின் நிலத்தடி நீர் கணிசமாக உயர்ந்து விடும். போர்வெல் மூலம் விவசாயம் நடக்கும். குடிநீர் பிரச்னையும் தீரும்.

''அத்திக்கடவில் இருந்து சுமார் 4 கி.மீ. தூரத்திற்கு மலையைக் குடைந்தும், சுமார் 125 கி.மீ. தூரத்திற்கு வாய்க்கால் வெட்டியும், தண்ணீரைக் கொண்டு வருவது தான் இதுநாள் வரை திட்டமாக இருந்தது. மூவாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. பெருமளவு நீர் ஆவியாகி விடும் அபாயமும் அலசப்பட்டு வந்தது.

''இப்போது அதற்கெல்லாம் தீர்வு மாதிரி, முதலமைச்சர் எடப்பாடி அரசு இந்த அத்திக்கடவு திட்டத்தை மாற்றி, காளிங்கராயன் பகுதியிலிருந்து அமல் செய்ய, ஆரம்பக்கட்ட நிதி ஒதுக்கியிருக்கிறது. பவானி ஆற்றிலிருந்து நீரைப் பம்ப் செய்து பெரிய குழாய்கள் மூலம் தண்ணீரைக் கொண்டு வரும் திட்டம் இது. செலவும் பாதியாகி விடுகிறது. நீர் ஆவியாவதும் தடுக்கப்படுகிறது. எனவே, இது நல்ல திட்டம்தான்.

''சுமார் 70 ஆண்டுகால கோரிக்கை நடைமுறைக்கு வர இருப்பதில் சந்தோஷம்தான். ஆனால், இதுவும் பேச்சளவில் நின்று விடாமல், சொன்னபடி தண்ணீரைக் கொண்டு வந்து இங்கு கொட்டினால்தான் எங்களுக்கு முழு நிம்மதி'' என்றார் அம்பலவாணன். 94 வயதாகும் அவருக்கு, தனது காலத்தில் அந்தத் தண்ணீரைப் பார்த்து விட வேண்டுமென்ற ஆவல் உள்ளது.

ஜனவரியில் நடந்த துக்ளக் ஆண்டு விழாவில் அத்திக்கடவு திட்டம் குறித்து மேடையில் பேசிய வாசகர் - **அவிநாசி வேலுச்சாமி**, பாரதீய கிஸான் சங்கத்தில் இருக்கிறார். 1957 முதல் 1967 வரை இவரது அப்பா மாரப்பக் கவுண்டர்தான், அவிநாசி தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இருந்தார். பிளவுபடாத காங்கிரஸ் கட்சி சார்பில் எம்.எல்.ஏ.வாக இருந்த அவர், அப்போதே இந்த அத்திக்கடவுத் திட்டம் குறித்து காமராஜரிடம் கோரிக்கைகள் வைத்துள்ளார்.

காமராஜர் பரிசீலித்து செயல்படுத்துவதற்கு முன்பாக அவரது ஆட்சி போய் விட்டது. பிறகு அத்திக்கடவுத் திட்டம் திராவிட ஆட்சிகளில் தேர்தல் நேரத்து



தீர்த்தக் குட யாத்திரை



எம்.வேலுச்சாமி

வாக்குறுதியாக மட்டுமே மாறிப் போனது. ''எங்க அப்பா காலத்தில் இந்தளவு வறட்சி கிடையாது. நிலத்தடி நீர் கிணறுகளில் எளிதாகக் கிடைத்தது. அதனால் அப்போது பெரியளவில் இந்தக் கோரிக்கை எடுபடவில்லை. கருணாநிதி ஆட்சியில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கிய பிறகு, எல்லோரும் நிலத்தடி நீரை உறிஞ்சத் துவங்கியதும் நிலத்தடி நீர் பாதாளத்திற்குப் போய் விட்டது. அதற்குப் பிறகுதான் நாங்கள் தீவிரமாகப் போராடத் துவங்கினோம்.


''பல போராட்டங்களுக்குப் பிறகும் தீர்வு எதுவும் கிடைக்காததால், 2001 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் 'தண்ணீர் வேட்பாளர்' என்கிற பெயரில் ஒரு சுயேச்சை வேட்பாளரை நிறுத்தினோம். அ.தி.மு.க. ஜெயித்து விட்டாலும், 38 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் பெற்று, இரண்டாமிடத்திற்கு வந்தோம். தி.மு.க. கூட்டணி டெபாஸிட்டை இழந்தது. அரசியல் கட்சியினர் வாக்குறுதிகளைத்தான் தந்தார்களே தவிர, எதுவும் செயல்படுத்தப் படவில்லை.

''அம்மா காலத்தில் நாங்களும் அவரைப் பார்க்க எவ்வளவோ முயன்றோம். ஆனால் யாராலும் சந்திக்க அனுமதி வாங்கிக் கொடுக்க முடியவில்லை. அவரை மந்திரிகளே பார்க்க முடியாத நிலையில், பாவம் அவர்கள் எப்படி எங்களுக்கு நேரம் ஒதுக்க முடியும்? இப்போது எடப்பாடி பழனிசாமி வந்த பிறகு, முதலமைச்சரைச் சந்திப்பது சாத்தியப்பட்டிருக்கிறது. பல முறை சந்தித்துள்ளோம். இப்போதைக்கு, ஒரு பொறியாளர் தலைமையில் ஒரு அலுவலகத்தைத் துவக்கி, ஆரம்பக் கட்ட நிதியும் ஒதுக்கி இருக்கிறார்கள். எந்தளவுக்குத் துரிதமாக வேலை நடக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்'' என்றார் **எம்.வேலுச்சாமி.**

**களஞ்சியம் அமைப்பைச் சார்ந்த கே.சுப்ரமணியம்** என்பவர்தான், அத்திக்கடவு - அவிநாசி திட்டப் போராட்டக் குழு கூட்டமைப்பின் மக்கள் தொடர்பு அதிகாரியாகச் செயல்பட்டு வருகிறார். அவரையும் சந்தித்துப் பேசினேன். ''ஆர்தர் காட்டன் என்ற ஆங்கில படைத் தளபதி, 1834-ஆம் வருடம் இந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்தபோது, அந்தப் பக்கம் பவானி ஆற்றுப் படுகையும், இந்தப் பக்கம் நொய்யல் ஆற்றுப்படுகையும் பசுமையாக இருக்கும்போது அன்னூர் - அவிநாசி - பெருந்துறைக்கு இடைப்பட்ட பகுதி மட்டும் வறண்ட பூமியாக இருப்பதைக் கவனித்தார். அவர்தான் முதன்முதலில் பவானி ஆற்றிலிருந்து வீணாகக் கடலில் கலக்கும் நீரை, வாய்க்கால் வெட்டி ஏன் இந்தப் பகுதிகளை பசுமையாக்கக் கூடாது என்ற கோரிக்கையை அரசுக்கு வைத்தார். ஆக, 19-ஆம் நூற்றாண்டிலேயே பேசப்பட்ட திட்டம் இது.

''அதன் பின்னர் 1905-ல் தமிழகத்தின் தலைமைப் பொறியாளராக இருந்த ஆர்.என். ஆரோக்கியசாமி முதலியார், இந்தப் பகுதிகளை எல்லாம் ஆராய்ந்து திட்டங்களைப் பரிந்துரை செய்தார். அதில் பில்லூர் அணைப் பகுதியிலிருந்து அவிநாசி வழியாகக் கால்வாய் வெட்டும் திட்டம் பரிந்துரைக்கப்பட்டது.

''அதன் பிறகு காமராஜர் காலத்தில், குந்தா கழிவுநீர் திட்டம் என்ற பெயரில் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டது. பிறகு 1992-ல், டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி இந்தக் கால்வாய் திட்டத்திற்காக ஈரோடு முதல் கோவை வரை பாத யாத்திரை மேற்கொண்டார். பிறகு 1998-ல் மறுபடியும் அவர் காரமடை முதல் சென்னிமலை வரை வாகனப் பேரணி ஒன்றையும் நடத்தினார். ஆனாலும் அரசுகளின் பார்வை இந்தத் திட்டத்தின் மீது விழவில்லை.



கே.சுப்ரமணியம்

''2000-ஆம்

ஆண்டு முதல் மக்களின் போராட்டம் ஆரம்பமானது. 2000-ல் 800 பேர் மொட்டையடித்துப் போராட்டம் நடத்தினார்கள். 2001 மற்றும் 2006 சட்டமன்றத் தேர்தல்களில் எங்கள் சார்பில் சுயேச்சை வேட்பாளரை நிற்க வைத்தோம். 2013-ல் நாங்கள் ஒரு வாகனப் பேரணியை நடத்தினோம். 2014-ல் அவிநாசி நகருக்குள்ளேயே ஒரு அமைதி ஊர்வலத்தை நடத்தி தாசில்தாரிடம் மனுக் கொடுத்தோம். 2015-ல் தமிழருவி மணியன் தலைமையில் விழிப்புணர்வுக் கூட்டம் நடந்தது. அடுத்து அதே ஆண்டில் 12 பேர் காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் துவக்கினார்கள். ஆனால், அரசின் கெடுபிடியால் அன்று மாலையே உண்ணாவிரதம் முடிந்தது.

''2016-ல் மீண்டும் 14 பேர் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினோம். இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக அன்னூர், சேவூர், குன்னத்தூர், பெருமாநல்லூர் முதலான பல்வேறு ஊர்களிலும் 75-க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதம் இருந்தனர். அந்தப் போராட்டத்திற்கு அ.தி.மு.க.வைத் தவிர ஸ்டாலின் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், அமைப்புகளின் தலைவர்களும் வருகை தந்தனர். பொதுமக்களும் மொட்டையடித்தல், ஆட்சியர் அலுவலக முற்றுகை, மனிதச் சங்கிலி, கடையடைப்பு என்று பொது மக்கள் பலரும் பல்வேறு வழிமுறைகளில் தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

''பத்தாவது நாள் உண்ணாவிரதத்தின்போது சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா, 110 விதியின் கீழ் அத்திக்கடவுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார். அதைச் சொல்லி எங்களை கலையச் சொல்லி அதிகாரிகள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், நாங்கள் அந்தத் திட்டத்திற்கான அரசாணை




வெளியிட்டு, ஆரம்பகட்ட நிதியை ஒதுக்கீடு செய்தால்தான் போராட்டத்தை நிறுத்துவோம் என்று கூறிவிட்டோம். அடுத்த இரண்டு நாளில் '1862 கோடி ரூபாய் திட்டத்தில் அத்திக்கடவு திட்டம் நிறைவேற்றப்படும். அதற்கு ஆரம்பகட்ட நிதியாக 3.27 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது' என்று 110 விதியின் கீழ் அறிவித்தார். அரசாணையும் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த உண்ணாவிரதப் போராட்டம் வாபஸானது.

''அடுத்த மாதமே தேர்தல் அறிவிப்பு வெளியானது. மீண் டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. ஆனால், திட்டம் துவங்கப்படவில்லை. இதனால் 2016 டிசம்பரில் ஒரு கருத்தரங்கத்தை நடத்தினோம். அதில் பல்வேறு கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

''அரசியல்வாதிகள், அதிகாரிகள் எல்லோரையும் பார்த்தாயிற்று. இனி தெய்வத்தையும் பார்த்து விடுவோம் என்று, 2015-ஆம் ஆண்டு சித்திரை மாதம் 1-ஆம் தேதி மேட்டுப்பாளையம் வன பத்ர காளியம்மன் கோவில் அருகே, பவானி ஆற்றிலிருந்து சுமார் 2 ஆயிரம் தீர்த்தக் குட யாத்திரையை



மேற்கொண்டோம். 2016, 2017 ஆகிய ஆண்டுகளிலும் இதைச் செய்துள்ளோம். வீட்டுக்கு வீடு, கடைக்குக் கடை அத்திக்கடவு ஸ்டிக்கரை ஒட்டி வைத்துள்ளோம். ஒவ்வொருவர் கையிலும் இந்த அத்திக்கடவுத் திட்டத்திற்காக, 'என் உயிர் அத்திக்கடவு' என்று காப்பு கட்டிக் கொண்டு அலைகிறோம்.

''எங்களது போராட்டக் குழுவின் மூலம் இதுவரை 340-க்கும் மேற்பட்ட இடங்களில் கிளைகள் துவங்கப்பட்டு, பெயர்ப் பலகைகள் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திறப்பு விழாவிலும் 6 முதல் 8 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். இப்படி இந்தப் பகுதி மக்களின் ஒட்டு மொத்த லட்சியமாக இந்தத் திட்டம் மாறியுள்ளது.

''கடந்த 2017 - 18 பட்ஜெட்டில் 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. கடந்தாண்டு ஜூலை மாதம் பல்லடத்தில் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் பேசிய முதல்வர் எடப்பாடி பழனிசாமி, 'இந்தத் திட்டம் காளிங்கராயன் பகுதியிலிருந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான பணிகள் 2017 டிஸம்பரில் துவங்கி, 30 மாதங்களில் முடிவடையும்' என்று குறிப்பிட்டார்.

''ஆனால் இன்னமும் பணிகள் துவங்கவில்லை. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை ஐந்தாறு முறை சந்தித்து விட்டோம். இப்போது எல்லாம் நெருங்கி வந்துள்ளது. விரைவில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற இருக்கிறது. இந்த முறை தொய்வில்லாமல் நிதி ஒதுக்கி, இந்த நீண்டகாலக் கனவை நனவாக்குவார்கள் என்று கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட மக்களும் நம்பிக்கையோடு காத்திருக்கிறோம். வருகிற பட்ஜெட்டில் இதற்கான நிதி அறிவிப்பை ஆவலுடன் எதிர் நோக்கியுள்ளோம்'' என்றார் **கே.சுப்ரமணியம்.**

**– எஸ்.ஜே.இதயா**